(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 447.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 ஏப்பிறல் 08, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4803/ '14

1.

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த. உயர் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமை மட்டத்தைக் கொண்டுள்ள ஆட்களின் தொழிலின்மை விகிதம் யாது;

(ii) 2013 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த தொழிலின்மை விகிதம் யாது;

(iii) தொழிலின்மை வீதம் கணிப்பிடப்படும் முறையியல் யாது;

(iv) கல்விகற்றோர், இளம் சந்ததியினர் மற்றும் பெண்கள் மத்தியில் தொழிலின்மை அதிகரித்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4827/ ' 14

2.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கை கடற்படையின் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதைக் குறிப்பிடுவாரா?

(ஆ) (ii) ஆமெனில், அவ்வாறு பெறப்பட்டுள்ள வாகன வகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) குளிரூட்டப்பட்ட வாகனமொன்றுக்கு மாதாந்தம் செலுத்தப்படும் வாடகை, வாகன வகைகளுக்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) பொதுவான பாதுகாப்புப் பணிகளில் மேற்படி வாகனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்காக மேற்படி வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கை கடற்படை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களுக்கு மாதமொன்றுக்கு செலுத்தும் வாடகை யாதென்பதையும்;

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மேற்படி வாகனங்ளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5424/ '14

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) புகையிரத திணைக்களத்தின் பயிற்சிபெற்ற கைவினை அடிப்படையிலான சேவைப் பிரமாணங்களின் பிரகாரம், 1997.01.01 தொடக்கம் சகல பயிற்சி பெற்ற கைவினைஞர்களும் மேற்படி சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) வேறு எந்தவொரு சேவைப் பிரமாணங்களிலும் காணப்படாத நிபந்தனையாக மேற்படி சேவையின் பிரிவுகள் மற்றும் பதவியுயர்விற்கு ஏற்ப "அ" பிரிவிலுள்ள கைவினைஞர்களுக்கு முதல் வகுப்பிற்கான பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்ற போது 6:1 விகிதாசாரம் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி விகிதாசாரம் 6/2006 சுற்றறிக்கை அமுல்படுத்தப்படுகின்றபோது மாற்றப்படுமென பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் இணங்கியிருப்பதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) எனினும், இற்றைவரை 6/2006 இன் பிரகாரம் பதவியுயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு தவறியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி பிரச்சினையின் காரணமாக சம்பள உயர்வின் உச்ச வரம்பில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஊழியர்களுக்கு அநீதி நேரிடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5448/ '14

4.

கௌரவ அநுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்தில் தேசிய லொத்தர் சபையினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட இலாபம் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய லொத்தர் சபையினால் நடாத்திவரப்படுகின்ற லொத்தர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) கடந்த முறை சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட மெகா லொத்தர் பற்றி விளம்பரம் செய்யப்பட்டதற்கிணங்க, முதலாம் பரிசுக்கு ரூபா 5 கோடியும், ஏனைய பரிசுகளாக 40 ஜீப் வண்டிகளும் சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பரிசு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) தற்போது ஏனைய ஒவ்வொரு லொத்தரும் சீட்டிழுக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற பரிசுகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் பரிசுத் தொகை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு குறைக்கப்பட்டிருப்பின் அதன் எண்ணிக்கை ரீதியிலான பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5580/ '14

5\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவர்கள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பு இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(iii) இது திருத்தியமைக்கப்படவில்லை எனின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5846/ '14

6\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலங்கை வக்பு சபையில் R/0682/T/036 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஜும்ஆ பள்ளிவாசலுக்கு இறுதியாக சட்டபூர்வமாக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பள்ளிவாசலுக்குரிய அசைவற்ற ஆதனங்களின் (காணிகள், வீடுகள் மற்றும் கடைகள்) எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த ஆதனங்களுக்கான உரித்தாவணங்கள் (உறுதிகள்) பள்ளிவாசலின் பெயரில் உள்ளனவா என்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு ஆதனத்தையும் வாடகை அடிப்படையில் அல்லது குத்தகைக்கு வழங்கும்போது வக்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) ஆமெனில், இவ்வுடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதிகள் மற்றும் உரிய குத்தகையாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ஆதனத்தையும் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், இலங்கை வக்பு சபையினதும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

5897/ '15

7\.

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழிற்படுகின்ற மேற்தர தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவிசாவளை தேர்தல் தொகுதியில், சீதாவகபுர புதிய மேற்தர தபால் அலுவலகத்துக்கான கட்டிட வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், மேற்படி மேற்தர தபால் அலுவலகத்தினை எதிர்வரும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் மக்களுக்கு கையளித்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவிசாவளை தபால் ஆளுகைப் பிரதேசத்தை சீதாவக தபால் ஆளுகைப் பிரதேசமாக பெயரிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேலே(அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தபால் அலுவலகம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதைத் தொடர்ந்து குறித்த ஆளுகைப் பிரதேசம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4828/14

8.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பொது வைத்தியசாலைக்கு தனது முதலாவது நியமனத்தைப் பெற்ற அதன் தலைமை தாதி உத்தியோகத்தரான திருமதி மல்காந்தி டி சில்வா தற்போது அதே வைத்தியசாலையில் இடமாற்றம் ஏதும் இன்றி 21 வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பதையும்,

(ii) மேற்படி தாதி உத்தியோகத்தர் பல சந்தர்ப்பங்களில் இடமாற்றம் கோரியிருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச தாதிமார் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்குகின்றபோது அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கை யாது;

(ii) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இடமாற்றம் கோரியுள்ள போதிலும்கூட, அரச தாதிமார்களுக்கு இடமாற்றம் வழங்கும் கொள்கை திருமதி மல்காந்தி டி சில்வாவுக்கு செல்லுபடியாகாதிருப்பதற்கான காரணம் யாது;

(iii) குறித்த இடமாற்றம் வழங்கும் கொள்கைக்கமைய இவருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா,

(iv) ஆமெனில், இவருக்கு, இவர் கோருகின்ற இடத்துக்கு இடமாற்றம் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4834/'14

9.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஒட்டுமொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு;

(ii) இவற்றில் மத்திய அரசாங்கத்தின் மூலம் மற்றும் மாகாணசபைகளின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iii) வடமேல் மாகாணத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி மாகாணத்தில் மீண்டும் திறக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5581/ '14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய ஆயுர்வேத மருத்துவ ஆணையாளரின் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலருக்கு ஆயுர்வேத மருத்துவவியல் தொடர்பாக உள்ள தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவர் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சில் அடைந்துகொள்ள முடியுமான உயர் தொழில்சார் பதவி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4829/ '14

11.

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில், கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், கரகொட உயன்கொட I அத மற்றும் II அத உள்ளிட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமது குடும்பங்களின் பயிர்ச்செய்கை விளைச்சலுக்கு குரங்குகள் மற்றும் மயில்களினால் நேரிடுகின்ற சேதத்தை தடுப்பதற்கு முடியாமல் உள்ளதால் பிரதேச மக்கள் கடும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்களை தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) இதற்காக எதிர்காலத்தில் கடைப்பிடிக்கவுள்ள முறையியல்கள் யாவை;

(iii) மேற்படி பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4835/'14

12.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் தற்போதுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) வடமேல் மாகாணத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காக மேற்படி மாகாணசபையின் மூலம் 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது;

(iii) 2012 ஆம் ஆண்டில் மேற்படி மாகாணசபையினால் பாடசாலை மாணவர் ஒருவருக்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

கல்வி அமைச்சர்,— தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்),— 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமொனதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1886/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 11.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.